# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, விர்ஜின், எதெல்பெர்கா, வில்சன் மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, குழந்தை தெரசா, ஸ்டெல்லா ரோஸ், மிரியம் -திண்டுக்கல், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், ரூபெல்லா மேரி - திருநெல்வேலி, ஜான்சி மேரி, விமல் மேரி, ஜசிந்தா, இரஞ்சிதம் - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், லோரா மேரி, வித்யா மேரி - தூத்துக்குடி, சகாயம்-கடலூர், புஷ்பாமேரி-சிவகங்கை, சலேத் மேரி-திருப்பூர்.

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், அனிருத் ஜோஸ்வா, கிளாரா லூர்து மேரி, லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, ஜெகரெட்சகன் ஜோசப், சந்தனம், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா - திண்டுக்கல், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர், இம்மாக்குலேட், கனிஷியஸ் விஷால் - சென்னை, சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், மரிய பிரகாசம்-தர்மபுரி.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. குழந்தை தெரசா - திண்டுக்கல்**
**அருட்சகோதரி. மேரி செசாரியா - சென்னை**
**திருமதி. கனிஷியஸ் விஷால் - சென்னை**
**திருமதி. ஜெகரெச்சகன் - திருச்சி**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# விண்ணகத் தாய்

## பதிப்பாசிரியர் பக்கம்


ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியாவின் பக்தர்களே, இந்த மண்ணுலக வாழ்வில் அன்னை மரியாள் எத்தனையோ மறுமலர்ச்சியினையும். பல முற்போக்கு சிந்தனைகளையும் நம்மில் விதைத்திருக்கின்றார். அதே அன்னை இன்றும் தன்னுடைய தாய்மையின் அடையாளத்தோடு நம்மை தொடர்ந்து வழிநடத்திக் கொண்டே இருக்கின்றார். ஆண்டவர் இயேசுவின் தாயாக இருந்தவர், கடவுளின் தாயாக உயர்கிறார், அவரே மண்ணுலகில் தாயாக இருந்து உலக மக்களின் தாயாக உயர்ந்து இன்று விண்ணுலகத் தாயாக உயர்ந்து இருக்கிறார்.

இந்த மாதம் 15-ம் தேதி அன்னை மரியாளின் விண்ணேற்புத் திருவிழாவினை நாம் கொண்டாடுகின்றோம். உடலோடும் ஆன்மாவோடும் அன்னை விண்ணிற்கு எடுத்துச் செல்லப்பட்ட நிகழ்வினைக் கொண்டாடுகின்ற நாம், புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று என்னவென்றால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய அன்னைக்கு கொடுத்த மாபெரும் பரிசுதான் இந்த விண்ணேற்பு என்ற பெரியபேறு. அன்னை மரியாளின் விண்ணேற்பு திருவிவிலியத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் நம்முடைய திருவிவிலியத்தில் இரண்டு நபர்கள் உயிரோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்வு இருக்கின்றது. இரண்டுமே பழைய ஏற்பாட்டில்தான் இருக்கின்றது. ஒருவர் ஏனோக்கு இன்னொருவர் எலியா இறைவாக்கினர். ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த அன்னை மரியாளின் விண்ணேற்பு திருவிவிலியத்தில் கொடுக்கப்படவில்லை.



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| புதிய ஏவையான மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| யார் அவர்? | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினரின் பார்வையில் மரியா | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

அப்படியென்றால் அன்னை மரியாளின் விண்ணேற்புக்கு என்ன சான்றுதான் இருக்கிறது?

கத்தோலிக்க திருஅவையின் நம்பிக்கையானது மூன்று தூண்களின் மீது கட்டப்பட்ட ஒன்றாகும். அவை திருவிவிலியம், திருஅவையின் பாரம்பரியம் மற்றும் திருஅவையின் படிப்பினைகள். இதில் அன்னை மரியாளின் விண்ணேற்பு எதன் அடிப்படையில் நம்பப்படுகிறதென்றால் திருஅவையின் பாரம்பரியம் மற்றும் திருஅவையின் படிப்பினைகள். ஆகவே அன்னை மரியாள் விண்ணகத்திற்கு உடலோடும் ஆன்மாவோடும் எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையா என்ன! தமத்திருத்துவத்தின் இரண்டாம் நபர், கடவுளின் ஒரே மகன், இந்த உலகைப் படைத்த வார்த்தை, உலகின் மீட்பர் இவ்வாறு பல பட்டங்களுக்கு சொந்தக்காரரான ஆண்டவர் இயேசுவே சிலுவையில் அறைந்துக் கொலை செய்யப்பட்டு, கல்லறையில் அடக்கம் செய்யபட்டு மூன்று நாட்கள் கழித்துதான் உயிர்த்து 40 நாட்கள் கழித்துதான் விண்ணகம் சென்றார். ஆனால் சாதாரண மனிதப் பெண்மணியான அன்னை மரியாளுக்கு மட்டும் ஏன் இத்தனை சிறப்புகள் கடவுள் கொடுக்க வேண்டும்.

அன்னை மரியாள் கடவுளின் திட்டத்திற்கு ஆம் என்று சொன்னதோடு அல்லாமல் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் கடவுளுக்கும் தான் கொடுத்த ஆம் என்ற வார்த்தைக்கும் பிரமாணிக்கம் உள்ள நபராக வாழ்ந்தார். எத்தனையோ சவால்கள் தன்னுடைய வாழ்க்கை முழுவதும் வந்தபோதும் ஒருபோதும் அன்னை பின்வாங்கவில்லை, தன்னால் முடியாது என்று சொல்லவும் இல்லை. தன்னுடைய வாழ்நாள் எல்லாம் ஆண்டவர் இயேசுவுக்கு சிறந்த தாயாக, சிறந்த சீடராக வாழ்ந்தார். அந்த வாழ்க்கைக்கு கடவுள் கொடுத்த மாபெரும் பரிசுதான் விண்ணேற்பு என்ற பெருமை. இத்தகைய சிறப்பு வாய்ந்த பெருமைக்கு தகுதியான நபராகதான் அன்னை இன்றும் நடந்து கொள்கின்றார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. விண்ணேற்பு அடைந்த அன்னை தன்னுடைய எல்லையை விண்ணோடு ஒன்றும் நிறுத்திக் கொள்ளவில்லை. தொடர்ந்து இந்த மண்ணுலக மக்களோடும் தன்னுடைய உறவை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றார். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள்தான் அன்னையின் காட்சிகள். உலகில் எத்தனையோ இடங்களில் அன்னை தொடர்ந்து காட்சிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார். அவர் எங்கெல்லாம் காட்சிக் கொடுக்கின்றாரோ அங்கெல்லாம் அவர் வேண்டிக் கேட்டுக் கொள்வது பாவிகளின் மனமாற்றத்திற்காக ஜெபியுங்கள் என்று. இன்று விண்ணுலகம் சென்று விண்ணுலக மண்ணுலக அரசியாக முடிசூட்டப்பட்டிருக்கும் அன்னை நமக்காக என்றும் தன்னுடைய மகனிடம் பரிந்து பேசுகின்றவராக இருக்கின்றார். அத்தகைய அன்னையின் பாதம் பணிவோம். அவர் நம்முடைய விண்ணப்பங்களை ஆண்டவர் இயேசுவின் திருவடிகளுக்கு எடுத்துச் செல்வார்.

**விண்ணகத் தாயைப் போற்றுவோம்**
**என்றும் அவர் பாதம் பணிவோம்**

**குறிப்பு:** ஆகட்டும் இதழில் பல வருடங்களாக கவிதைகள் எழுதி வந்த **திருமதி பிலோம்மா** இறைவனடி சேர்ந்திருக்கின்றார். அன்னாரது ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவோம். மேலும் **அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்** என்ற கட்டுரையை ஆகட்டும் இதழில் தொடர்ந்து எழுத இருக்கும் தஞ்சாவூர் ஜீவமாதா இல்ல அதிபர் **அருட்தந்தை டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச** அவர்களை ஆகட்டும் இதழின் உரிமையாளர் ஐக்கிய அன்னை மறைமாநில அதிபர் அருட்பணி உவரி அந்தோணி ம.ஊ.ச, ஆகட்டும் இதழின் ஆசிரியர்கள் மற்றும் வாசகர்கள் சார்பாக வரவேற்கின்றோம். அவரின் எழுத்துப்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.





பிறகு இப்போது மரியாவுக்கு நன்றி சொல்ல வந்திருக்கிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

என் மகனுக்கு ஒரு உணவு விடுதி கட்ட மாதாவிடம் வேண்டினோம். பல துன்பங்கள் மத்தியில் இப்போது இறைவன் எங்களை ஆசீர்வதித்து நல்லமுறையில் இன்று உணவு விடுதி செயல்படுகிறது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

மரிய கிருபா

ஜீவ மாதாவை பற்றி அறிந்து என் முதல் மகளுக்கு நல்ல வரன் வேண்டி வந்தேன். நல்ல வரனும் அமைந்தது குழந்தை பாக்கியமும் கிடைத்தது. மேலும் என் இரண்டு மகள்களுக்காகவும் ஜெபிக்கிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

நான் 2016-ம் ஆண்டில் குழந்தைக்காக வேண்டினேன். 2017-ம் ஆண்டு இரட்டை குழந்தைகள் பிறந்தனர். மேலும் எனக்கு ஜெர்மனி நாட்டில் மென்பொருள் நிறுவனத்தில் வேலைவாய்ப்பும் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஜூலை மாதம் 6 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**தாம்பரம்**

எனக்கு திருமணம் ஆகி இரண்டு வருடமாக குழந்தை இல்லை. பல்வேறு ஆலயத்திற்கு சென்றோம். பின் இந்த ஆலயத்தை சார்ந்த தெரிந்தவர் உதவியோடு முதல் சனிக்கிழமை இந்த ஆலயத்திற்கு வந்து செபித்தோம். மரியாவின் உதவியால் எங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**தாம்பரம்**

நான் 2016-ம் ஆண்டு இங்கு வந்து என் மகளுக்காக வேண்டினேன். மாதாவிடம் இடைவிடாது செபித்தேன். எனக்கு 2019-ம் ஆண்டு குழந்தை பாக்கியம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**திருவற்றியூர்**

நான் ஒன்றரை வருடமாக குழந்தை இல்லாமல் இருந்தேன். அருட்தந்தை கில்பர்ட்ராஜ் வழியாக இந்த ஆலயத்திற்கு வந்து ஜெபித்தேன். மாதாவின் உதவியால் எனக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தது. 2011-ம் ஆண்டுக்கு





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு சிறுவனுக்கு கடவுளைக் காண வேண்டும் என்று ஆசை. கடவுளை கண்டுகொண்டு அதிகமாக செல்வம் பரிசாக பெற வேண்டும் என்று ஜெபித்தான் ஒருநாள் கடவுளின் வானத்தூதர் சிறுவனுக்கு தோன்றினார். என்ன வரம் வேண்டும்? என்றுக் கேட்டார், நான் பணக்காரனாக வேண்டும் என்றான் சிறுவன். வானதூதர் தன்னுடைய ஆள்காட்டி விரலை நீட்டி நாற்காலியைத் தொட்டார், அது தங்கமாக மாறியது, இதை எடுத்துக் கொள் என்று கூறினார். சிறுவன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் மீண்டும் வானதூதர் ஒரு மேஜையைத் தொட்டார் அதுவும் தங்கமாக மாறியது, இதையும் எடுத்துக் கொள் என்று கூறினார். மீண்டும் சிறுவன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். சிறுவனுக்கு இது போதாது என்று நினைத்த வானத்தூதர் தன்னுடைய ஆள்காட்டி விரலால் வீட்டில் இருந்த கட்டில், பீரோ அனைத்தையும் தொட்டார், அவையும் தங்கமாக மாறின. சிறுவன் மீண்டும் வானதூதரையே பார்த்துக் கொண்டு நின்றான். வானதூதர் சிறுவனிடம் தம்பி உனக்கு என்ன வேண்டும், ஏன் என்னை பார்த்துக் கொண்டே இருக்கிறாய், நீ கேள் நான் தருகிறேன் என்றார். சிறுவன் வானதூதரின் அருகில் சென்று, தங்கமாக மாறிய நாற்காலி, மேஜை, பீரோ, கட்டில் எதுவும் எனக்கு வேண்டாம். உங்களுடைய ஆள்காட்டி விரலை மட்டும் வெட்டி எனக்கு கொடுங்கள், அது மட்டும் போதும் எனக்கு என்றான்.

முடிவு எடுப்பது என்பது ஒருகலை, வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் எதை சிந்திக்கலாம், எதை சொல்லலாம், எதை செய்யலாம் என்று தேர்வு செய்கின்றோம். நாம் தேர்வு செய்வதைப் பொறுத்துதான் நம்முடைய வாழ்க்கை அமையும். கபிரியேல் வானதூதர் இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தபோது நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக் 1:28) என்றார். மரியாள் யாரையும் கலந்தாலோசிக்காமல் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தார். முடிவு எடுத்தது மட்டுமல்லாமல் முழு உள்ளத்தோடு தன்னை அர்ப்பணித்தார். நம்மால் தெளிவான முடிவுகளை எடுக்க முடிகிறதா? எடுக்கின்ற முடிவுகளில் உறுதியாக இருக்கின்றோமா? என்று சிந்தித்து பார்க்க வேண்டும். அன்னை மரியைப் போல திடமான முடிவுகளை எடுக்க அன்னையின் அருளை நாடுவோம்.

# புதிய ஏவையான மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

### தொடக்கவுரை

தூய தூய கன்னி மரியாவுக்கு நிறைய பெயர்களை கொடுத்து அன்போடு அழைத்து வருகின்றோம். இறையியல் மற்றும் திருஅவை கோட்பாடுகளின் அடிப்படையில் அவர் இறைவனின் தாய், அமல உற்பவி, ஆன்ம உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பரலோக அன்னை என்று பல பெயர்கள் அளிக்கப்படுகின்றன. அவரின் புண்ணியங்கள், அவரிடம் பெற்ற புதுமைகள், நலன்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டும் இன்னும் பல பெயர்களை அன்னை மரியாவுக்கு ஏற்றிப் போற்றுகின்றோம். ஞானத்தின் இருப்பிடமே, மகிழ்ச்சியின் காரணமே, நோயுற்றோரின் அருமருந்தே, விடியற்காலை நட்சத்திரமே போன்ற பெயர்கள் அவரின் மன்றாட்டு மாலையில் இடம் பெறுகின்றன. திருஅவையில் தொன்றுதொட்டு இன்று வரை கன்னி மரியா புதிய ஏவை என்று அழைக்கப்படும் மரபு இருந்து வருகிறது. திருவழிபாட்டு செபங்களிலும் இது இடம் பெறுகிறது. புதிய ஏவையான மரியாவின் செயல்பாடுகளை இக்கட்டுரையில் காண்போம்.

### மனுக்குலத்தின் முதல் தாய் ஏவை

ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும் விண்ணுலகையும் படைத்த பின் மண்ணால் மனிதனை உருவாக்கினார். ஆனால் தனது சாயலாக அவனைப் படைத்தார். ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தான் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார். ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம் ‘தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம், ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே் ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்’’ என்று கட்டளையிட்டுச் சொன்னார். பின்பு அவன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று உணர்ந்தவராய் அவனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கினார். சூழ்ச்சி மிக்க பாம்பு தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை உண்ணத் தூண்டியது. அதை உண்டால் நீங்கள் சாகவே மாட்டீர்கள். ‘ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்று கடவுளுக்குத் தெரியும்’’ என்றது. பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதை தனது கணவனுக்கும் கொடுத்தாள். முதல் பாவம் ஒரு பெண்ணின் வழியாக இவ்வுலகில் நுழைந்தது. அதுவும் ஒரு பழத்தைத் தின்றதால் நிகழ்ந்தது. இதனால் ஏவாள் மட்டுமல்ல, அவள் வழியாக இவ்வுலகில் தோன்றிய அனைவரும் பிறப்பு நிலை பாவத்திற்கு உள்ளாகினர். இவ்வுலகில் கீழ்படியாமையால் இப்பாவம் நுழைந்தது. இறைவனின் கட்டளை முதல் முறையாக மீறப்பட்டது. பாவத்தின் நிழல் இவ்வழகான உலகைக் கவ்வி நின்றது.

### இறைவனின் கோபமும் கருணையும்

மனிதனின் கீழ்ப்படியாமையை நினைத்து இறைவன் கோபம் கொள்கின்றார். ‘நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ? என்று கேட்கின்றார். அவன் பெண் மீது பழியைப் போட,





அன்னை மரியாவைப் பற்றிய சிநதனையும் புனித அகஸ்டினின் சிந்தனையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைகிறது. திருஅவை தந்தையர்களின் பங்களிப்புகளே அதுவும் சிறப்பாக அன்னை மரியாவை பற்றிய பங்களிப்புகளே புனித அகஸ்டின் அவர்களின் பார்வையும் பணியும் தொடக்கமாக அமைகிறது.

### மீட்புத்திட்டத்தில் அன்னை மரியா

திருஅவையின் மீட்பு வரலாற்றிலே கிறிஸ்துவின் பிறப்பே மையமாக வைத்துப் பார்க்கப்படுகிறது. கலிலேயாவைச் சார்ந்த நாசரேத்தூர் மரியாவின் மகனாக இயேசு பிறந்தது அந்த தொடக்கம். அதன்வழியாக நாம் மீட்பு பெற நம் பாவங்களை விலக்க வேண்டும் என தெரிவிக்கிறார் புனித அகஸ்டின். கிறிஸ்து நம்மைப் போன்று ஒருவராக பாவம் தவிர மற்றனைத்திலும் மனிதர்களைப் போல வாழ்கிறார். இயேசுவின் பாடுகள், மரணம், இறப்பு ஆகியவற்றின் வழியாக கிறிஸ்து மனித இயல்பில் நம்மைப் போல் ஒருவராக வாழ்கிறார். இறுதியில் புனித அகஸ்டின் சொல்கிறார், கிறிஸ்துவின் பிறப்பு மனித குல மீட்பின் தொடக்கமாக அமைவதை விளக்கமாக எடுத்துரைக்கிறார்.

### கடவுளின் மீட்புத் திட்டம்

கிறிஸ்துவின் பிறப்பே கடவுளின் மீட்புத் திட்டத்தின் தொடக்கம் என்று புனித அகஸ்டின் கூறுகிறார். பாவத்திற்கும், பாவத்தினால் வரும் சாவிற்கும் எப்படி ஆதாம் மற்றும் ஏவாளின் கீழபடியாமை காரணமாயிற்றோ அதுபோல கடவுளின் மீட்புத் திட்டத்தில் கிறிஸ்துவின் பிறப்பும் அன்னை மரியாவின் ஆம் உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்ற கீழ்படிதலும் தொடக்கமாக அமைகிறது என்று கூறுகிறார் புனித அகஸ்டின். மேலும் ஒருபடி மேலே சென்று கிறிஸ்து கடவுளுக்கும் மனிதருக்கும் தொடர்பாளராக இணைப்பாளராக செயல்படுகிறார் என்றும் கூறுகிறார். இதையே புனித அகஸ்டின் கிறிஸ்து தந்தையால் முன்குறிக்கப்பட்டுள்ளார் என்று விளக்கமாக கூறுகிறார். அதற்கு விளக்கம் தருகையில், கிறிஸ்து நமது தலையாக இருக்க முன்குறிக்கப்பட்டுள்ளார் என்று கூறி அத்தகைய உறுப்பினர்களாகிய நாமும் கிறிஸ்துவில் இணைந்து வாழ முன்குறிக்கப்பட்டுள்ளோம் என்று கூறி முடிக்கிறார். எனவே பழைய ஆதாம் வழியாக இழந்த நம் அருளை நாம் கிறிஸ்து வழியாக பெற்றுள்ளோம் என்று கூறுகிறார். இந்தக் கருத்தை விலியுறுத்திக் கூற கலா 4:4 மற்றம் உரோ 1:2-3 போன்ற இறைவார்த்தைப் பகுதியினை கையாளுகிறார். பிறகு அன்னை மரியாவும் கிறிஸ்துவின் தாயாக ஆவதற்கு கடவுளால் முன்குறிக்கப்பட்டுள்ளார் என்பதை எடுத்துக் கூறி அன்னை மரியாவும் கடவுளின் மீட்புத் திட்டத்தில் தம் மகனுடன் முழுமையாக பங்கு பெறுகிறார் என்றும் கூறுகிறார்.

### கடவுளின் அருளில் அன்னை மரியா

புனித அகுஸ்தினாரைப் பொறுத்தமட்டில் அன்னை மரியா மீது கடவுளின் எல்லையில்லா அருள் நிறையப் பொழியப்பட்டுள்ளதை நம்பி அறிக்கையிடுகிறார். அன்னை மரியா கருத்தரித்தலைப் பற்றி அறிக்கையிடும்போது நம்பிக்கையினால் கருவுற்றார் என்று கூறுகிறார். அதாவது அன்னை மரியா பிறப்பதற்கு முன்பே இருந்தவர் ஆண்டவர், எனவேதான் கூறுகிறார் தனக்கு முன்பே இருந்த ஆண்டவரை தனது நம்பிக்கையின் வாயிலாக கருத்தரித்தார் என்று கூறுகிறார். தன்னுடைய மகனை தாங்குகின்ற கருவியாக அன்னை மரியாவை தந்தையாம் கடவுள் முன்குறித்து வைத்து அவரைப் படைத்திருக்கிறார். அன்னை மரியாவை தேர்ந்தெடுப்பதிலே தந்தையாம் கடவுள் விருப்பப்பட்டுள்ளார். அதையே சில புனிதர்கள் அன்னை மரியாவுக்கு கடவுள் தந்த சலுகை என்று கூறுகின்றனர்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச



தொடக்க கால திருஅவையில் இருந்தே அன்னை மரியா ஒரு அதிசயமாக இருந்து வருகிறார். மக்களின் வாழ்வில் கலந்தவராக தவழ்ந்து வருகிறார். எபேசு பொதுசங்கம்(431) அன்னை மரியாவை கடவுளின் தாயாக பிரகடனம் செய்தது. அதற்கு முன்பாகவும் பின்பாகவும் திருஅவையின் வரலாற்றில் அன்னை மரியாவிடம் இறைமக்களின் அன்பு பெருகி காணப்பட்டது. மரியா வணக்கம் அதிகம் காணப்பட்டது, உணரப்பட்டது. அன்னை மரியா வணக்கத்திலே ஏற்றமும் எழுச்சியும் வளர்ச்சியும் வழக்கமும் ஏற்பட்டது. புனித அகஸ்டின் இப்பின்னணியில் அன்னை மரியா மீது உள்ள அன்பை மனிக்கேயிசத்திற்கு எதிரக பேசுவதன் வாயிலாகவும் ஏரியினசத்திற்கு எதிராக பேசுவதன் வாயிலாகவும் மற்றும் பிலாஜினசத்திற்கு எதிராக பேசுவதன் வாயிலாகவும் விளக்குகிறார்.

**மனிகேயிசம்-** கிறிஸ்துவின் இறைத்தன்மையை மட்டும் ஏற்றுக் கொள்கின்றனர், மனித தன்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே மரியாவை ஏற்றுக் கொள்ளவில்லை.

**ஏரியினசம்-** இதுவும் கறிஸ்துவின் இறைத்தன்மையை மறுக்கும் கொள்கையாகும்.

**பிலாஜினசம்-** ஜென்மப் பாவத்தை மறுக்கும் கொள்கையாகும்.

புனித அகஸ்டின் தமது சிந்தனைகளையும் கொள்கைகளையும் புனித சிப்ரியன் மற்றும் புனித அம்புரோசியாரைப் பின்பற்றி எடுத்துரைத்தார். பழைய ஏற்பாட்டு நூல்களையும் புதிய ஏற்பாட்டு நூல்களையும் ஆராய்ந்து அன்பு செய்து அன்னை மரியாவை உலகிற்கு கொண்டு வந்தார்.

### தாவீதின் வழிமரபு

அன்னை மரியா தாவீதின் வழிமரபில் வந்தவர் என்பதை சுட்டிக் காட்டுகிறார். ஆரோன் வழித்தோன்றலை இணைத்து அன்னை மரியாவின் அன்புறவை எலிசபெத்தோடு இணைத்து அறிக்கையிடுகிறார். தாவீதின் வழிமரபில் வந்தவர் என்பதற்கு புனித அகஸ்டின் உரோ 1:3 என்ற இறைவார்த்தையையும் 2திமோ 2:8 என்ற இறைவார்த்தையையும் இணைத்து பயன்படுத்துகிறார். மத்தேயு நற்செய்தியிலும் லூக்கா நற்செய்தியிலும் உள்ள இயேசுவின் குழந்தை பருவ நிகழ்ச்சியினை இணைத்து அன்னை மரியாவை ஆதாம் மற்றும் ஏவாள் வழிவந்தவர் என்றும் ஆபிரகாம், யூதா, ஈசாக்கு மற்றும் யாக்கோபின் வழிவந்தவர் என்றும் அறுதியிட்டு கூறுகிறார்.

### புனித அகுஸ்தினாரின் பார்வையில் மரியா

அன்னை மரியாவின் மேல் அன்புப் பார்வையை பதித்தவர் புனித அகஸ்டின். புனித அகஸ்டின் அவரின் சிந்தனை துளிகள்தான் முதன்முதலாக அன்னை மரியாவை உலகிற்கு வெளிக்கொணர்ந்தது. திருஅவையில் அனனை மரியாவைப் பற்றிய புரிதல்கள் மேலோங்கிய காலம் புனித அகஸ்டினின் காலம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஆவணங்களில் ஒன்றான லூமன் ஜென்சியம் 8-ம் அத்தியாயம் 53 மற்றும் 65 வது பத்தியில் காணப்படும்





அவளிடம் இறைவன் அடுத்த கேள்வியைக் கேட்கின்றார். அவள் பாம்பின் மீது பழியைப் போடுகின்றாள். இறைவன் விடவில்லை, பாம்பு சபிக்கப்படுகிறது. வாழ்நாளெல்லாம் புழுதியைத் தின்பாய் எனவும், பெண்ணிடம் அவரின் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன் என்றும், மனிதனிடம் நெற்றி வியர்வை நிலத்தில் விழ நீ உழைப்பாய் மேலும் நீ மண்ணுக்கேத் திரும்புவாய்'' எனவும் இறைவனின் கோபத்தின் பொறிகள் தெறிக்கின்றன. ஆயினும் பாம்பிடம் அவர் கூறிய சொற்கள் மனுக்குலத்திற்கு ஆறுதலாக அமைந்திருந்தது. புதிய ஏவையின் பிறப்பை உணர்த்தியதாக இருந்தது. மனுக்குலத்தின் விடியலை, மீட்பை அறிவித்ததாக இருந்தது. கண்டிப்புள்ள கடவுள் கருணை மிகுந்தவராகக் காணப்பட்டார். 'உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும், நீ அதன் குதிகாலைக் காயப்படுத்துவாய்'' என்றார் கடவுள். மீட்பரின் பிறப்பு ஒரு பெண் வழியாக நிகழப் போகிறது என்பது வெளிப்படுத்தப்படுகிறது. அப்பெண் கன்னி மரியா. அவர்தான் புதிய ஏவையாக இங்கு மறைவாக நிற்கின்றார்.

### புதிய ஏவை மரியா

பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு திருநூல்களும், திருஅவையின் மரபும் நிறைவாழ்வுத் திட்டத்தில் மீட்பரின் தாய்க்குரிய பணியை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. மெசியாவின் வருகைக்காக இறைவாக்கினர்கள் இவ்வுலகத்தைத் தயார் செய்தனர். மீட்பரின் தாயான ஒரு பெண்ணின் உருவை படிப்படியாக வெளிப்படுத்தினர். முதற்பெற்றோர் பாவம் புரிந்தபின் அலகையின் மேல் பெறப்போகும் வெற்றியைப் பற்றிய வாக்குறுதி அவர்களுக்கு அளிக்கப்பெற்றது. இவ்வாக்குறுதியில் மரியா முன்னுரு வகிக்கக் பெற்றார். 'கடவுள் நம்மோடு'' எனப் பெயர் பெறப்போகும் மகனைக் கருத்தாங்கிப் பெற்றெடுப்பார் என்ற எசாயா குறிப்பிட்ட கன்னி, மரியாவே ஆகும். மேலும் இறைவாக்கினர் மீக்கா மிக அழகாக நீயோ இஸ்ராயேலே ஆண்டவர் சார்பாக உன்னை ஆளப்போகிறவர் பெத்லகேமிலிருந்தும், யூதா குடும்பத்திலிருந்தும் பிறப்பார் என்று முன்னறிவித்ததும் மரியாவிடம் பிறக்கவிருக்கும் மீட்பரையே. புதிய ஏவையாக உலகம் தோன்றுவதற்கு முன்பே நித்தியத்தில் விண்ணகத் தந்தையின் நினைவில் தன் மகனுக்குத் தாயாகும் பேற்றினைப் பெற்றவராய் நிழலாடியவர். இறை அருளால் நிரப்பப் பெற்ற ஒரு பாத்திரம். தொடக்கநிலை பாவம் எதுவும் அவரை அணுகாதபடி தான் பெற்றெடுக்கவிருந்த இயேசுவால் மீட்கப் பெற்றவர். இறைவனின் கண்களில் பேறுபெற்ற மரியா, மனுகுலம் அனைத்தும் அதே பேற்றினைப் பெற மன்றாடும் திருஅவையோடு அதன் தாயாகவும் இருக்கின்றார்.

புனிதர்களான ஜஸ்டின் மற்றும் இரனேயு கூறுகிறார்கள்: ஏவை வழியாக இவ்வுலகில் சாவு நுழைந்தது, மரியா வழியாக வாழ்வு வந்தது. இது உண்மையான கூற்றாகும். ஆதாம்- ஏவாள் முதல் பாவத்திற்குப் பிறகு இவ்வுலகில் பாவம், சாவு, வேதனை, வியர்வை சிந்துதல், புறக்கணிப்பு, பகைமை அனைத்தும் நுழைந்தன. ஏதேன் தோட்டத்தில் மாலை வேளைகளில் மெல்லிய பூங்காற்றில் முதல் பெற்றோரோடு உலவி வந்த இறைவன், அங்கிருந்து அவர்களை விரட்டி விட்டார். இறைவனுடைய கட்டளைக்குக் கீழ்படியாமையால் அத்தனை துன்பங்களும் மனிதனைத் தாக்கின. ஆனால் மரியா, புதிய ஏவை, மனத்தாழ்மையும் பரிபூரண கீழ்ப்படிதலும் கொண்டு விளங்குகிறார். வானதூதரின் மீட்பு செய்தியை மகிழ்வுடன் ஏற்றார். இறைவார்த்தைக்குப் பணிந்தார். 'இதோ இறைவனின் அடிமை'' என்றார். மெசியாவின் தாயாகி, அவரை வளர்த்து ஆளாக்கி இறையாட்சிப் பணிக்கு அர்ப்பணித்தார். ஒரு கனியால் உலகில் பாவம் நுழைந்தது. ஆனால் இயேசு எனும் கனியை மரியா பெற்றெடுத்து மனுக்குலம் வாழ நமக்கு அவரைக் கொடையாகக் கொடுத்தார். இறைமகன் இயேசு சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து கொண்டு வந்தார். இதனால் எதிர்ப்புகளைச் சம்பாதித்தார்.

தொடக்க நூலில் குறிப்பிட்டுள்ளது போல பாம்பின் வித்தாகிய தீமையின் சக்திகளுக்கும், அன்னையின் வித்தான இயேசுவின் இறையாட்சி விழுமியங்களுக்குமிடையே போராட்டம் நிகழ்ந்து கொண்டேயிருந்தது. இயேசு கொல்லப்பட்டார், ஆனால் வெற்றி பெற்றார். உயிரோடு எழுந்து சாவு, பாவம், தண்டனை அனைத்திலுமிருந்து இவ்வுலகை மீட்டெடுத்தார். மரியாவை சிலுவையடியில் மனுக்குலத்தின் தாயாக, திருஅவையின் தாயாக இயேசு நமக்கு வழங்கினார். இத்தகைய மீட்பரைப் பெறும் பேறுபெற்ற மரியா புதிய ஏவையாக, வாழ்வைக் கொடுக்க வந்த இயேசுவின் தாயாக, புதிய படைப்பாகத் திகழ்கின்றார். ஏவாளால் விண்ணக வாயில் அடைபட்டது. ஆனால் மரியாவால் விண்ணக வாயில் திறக்கப்பட்டது. இவ்வாறு இயேசுவின் மீட்புப் பயன்களை உலக மக்கள் அனைவரும் அடைய தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கினார். புதிய ஏவையாகிய இன்றும் அவரை நாடிச் செல்வோர் அனைவருக்கும் மதம், மொழி கடந்து அனைவரையும் அரவணைக்கும், ஆறுதல் அளிக்கும் தாயாகத் திகழ்கின்றார்.

**நிறைவுரை**

மரியா, புதிய ஏவை என்று வெளிப்படையாக புதிய ஏற்பாட்டில் இடம்பெறவில்லை என்றாலும் யோவான் நற்செய்தியையும் திருவெளிப்பாடு நூலையும் படிக்கும் போது புதிய ஏவையான மரியா அங்கு பயணம் புரிவது புலனாகிறது. யோவான் தமது நற்செய்தியில் மரியாவின் பெயரை குறிப்பிடாமலே இருப்பதை உணரலாம். கானாவூர் திருமணத்தில் புதிய இரசமான இயேசுவை உலகிற்குக் காட்டத் துடிக்கும் மரியாவை புதிய ஏவையாக வெளிப்படுத்துகின்றார். அன்று மட்டுமல்ல, இன்றும் அவர் மக்கள் அனைவரும் புதிய இரசம் என்ற மகிழ்ச்சி நிறைந்தவர்களாக இருக்க வேண்டுமென விரும்புகிறார். சிலுவையில் நின்ற தம் தாயை நோக்கி 'இயேசு அம்மா இவரே உம் மகன்'' என்றார். பின்பு தம் சீடரிடம் 'இவரே உம் தாய்'' என்றார். இங்கு புதிய ஏவையாக, உலகின் தாயாக இயேசுவால் நமக்கு வழங்கப்பட்டவராக மரியா நிற்கின்றார். இறுதியாக திருவெளிப்பாடு நூலில் 12 ஆம் அத்தியாயத்தில் கதிரோனை ஆடையாகவும், நிலவைத் தன் காலடியிலும் பன்னிரு விண்மீன்களை முடியாகவும் கொண்டு காட்சியளித்த பெண் புதிய ஏவை மரியாவே. இத்தகைய மாட்சிக்குரிய நிலைமை அனைவருக்கும் உரித்தானது. ஆனால் நாம் செய்ய வேண்டியது என்ன? 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்ற அவரது வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்.

எனவே மரியா கடவுள் கையில் செயலற்ற ஒரு கருவி அல்ல. மாறாக, நம்பிக்கையாலும் கீழ்ப்படிதலாலும் மனித இனத்தின் நிறைவாழ்வுக்கு தன்னுரிமையுடன் ஒத்துழைத்தவர். புனித இரனேயு கூறுவது போல 'மரியா தன் கீழ்ப்படிதலால் தானும் மனித இனம் அனைத்தும் நிறைவாழ்வு பெற காரணமானார். அவரோடு பழங்காலத் தந்தையரும் தம் மறையுரைகளிலே பின்வருமாறு கூறுகின்றனர்: ஏவாளின் கீழ்ப்படியாமையால் விளைந்த முடிப்பு மரியாவின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப்பட்டது நம்பிக்கையின்மையால் கன்னி ஏவாள் கட்டியதை, நம்பிக்கையால் கன்னி மரியா அவிழ்த்துவிட்டார். ஏவாளோடு ஒப்பிட்டு மரியாவை 'வாழ்வோரின் தாய்'' எனவும் அவர்கள் அழைக்கின்றனர். 'ஏவாளால் சாவு, மரியாவால் வாழ்வு'' எனத் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கின்றனர். புதிய ஏவை மரியா நம்மிடம் கூறுவது என்ன? இறைவார்த்தைக்குப் பணிந்து தூய உள்ளதோடு இறைவனுக்குப் பணி செய்ய வேண்டும். எல்லாச் சூழலிலும் இறையருளில் நிலைத்திருக்க வேண்டும். அன்னையோடு இணைந்து மீட்பின் பயன்களை ஒவ்வொரு நாளும் அனுபவிக்க வேண்டும். அகத்திலும் புறத்திலும் விடுதலை உணர்வுகளால் நிறைந்திருக்க வேண்டும். இத்தகைய வரங்களை விண்ணக, மண்ணக அரசியாம் நம் தாய் மரியா நமக்குப் பெற்று தருவாராக!





இடம் கிடைக்காததும் (லூக்கா 2:7) அவர்கள் எருசலேம் கோவிலில் இயேசுவை ஆண்டவரை அர்ப்பணித்தபோது காணிக்கையாக இரண்டு மாடப்புறாக்களை கொடுத்ததும்( லூக்கா 2:24) அவர் ஒரு ஏழை என்பதற்கான சான்றுகளாக இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்னை மரியாவை நமது குடும்பப் பெண்ணாக நமது சகோதரியாக நமது உறவினராக நமது தாயாக பாவித்து நாம் வணங்க வேண்டும். இந்திய பெரு நகரங்களில் நடத்தப்பட்ட ஒரு கருத்துப்பணி கணிப்பில் மண வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்களா என்ற கேள்விக்கு 37 சதவீத மக்கள் இல்லை என்றே பதில் அளித்திருக்கிறார்கள். கணவன் மனைவியின் மனம் ஒத்த மன வாழ்வு என்பது மிகவும் அழகானது, அருமையானது, அன்புக்குரியது, இனிமையானது, மகிழ்ச்சியானது, பரவசமானது இத்தகைய மன வாழ்வு இன்று பல சிக்கல்களுக்கும், சீர் குறைவுகளுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால், மரியாவின் மனவாழ்வை பற்றி சிறிது சிந்திக்க அழைக்கப்படுகிறோம். அவரும் யோசேப்பும் கொண்டிருந்த திருமண உறவு, இருவரும் நடத்திய மணவாழ்வு எப்படிப்பட்டது என்பதை பற்றி புதிய ஏற்பாட்டு நூல்கள் அதிகம் கூறவில்லை என்றாலும் சில ஆய்வு நூல்களில் கிடைக்க பெறும் ஓரிரு தகவல்களில் இருந்து நாம் அவர்களின் மண வாழ்க்கையை அறிந்து கொள்ள முடியும். அவர்களின் மணவாழ்க்கையை நாமும் பின்பற்றி அன்னை மரியாளை போலவும், யோசேப்பு போலவும் அவர்களை முன்மாதிரியாக கொண்டு நம் நமது மண வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழ அழைக்கப்படுகிறோம். மேலும் மரியா இயல்பாகவே அன்புள்ளம் கொண்டவர். அடுத்தவர் நலனில் அக்கறை கொண்டு செயல்படும் பண்பு உடையவர். அவர் எலிசபத்துக்கு உதவ விரைந்து சென்றதிலிருந்து அவரின் இறக்கத்தை கண்ணுரலாம். அதுமட்டுமல்லாமல் கானாவூர் திருமண விருந்தில் ஏற்பட்ட குறையை நீக்க தாமே முன்வந்து முயற்சி எடுத்து தன் மகனுக்கு அந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து திருமண வீட்டாரை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததிலிருந்தும் அவர் அடுத்தவர் நலனில் இருக்கும் அக்கரை பற்றி நாம் நன்றாக தெரிந்து கொள்ளலாம். மரியாவை போல நாமும் அன்புள்ளம் கொண்டவர்களாகவும், அடுத்தவர் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும், ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்பவராகவும், மரியாவை முன் மாதிரியாக கொண்டு வாழலாம். இறைவனது அருளின் உயிர் ஓவியமே மரியா.! கருவிலேயே அவள் இறையருளால் ஆட்கொள்ளப்பட்டவர். ஆண்டவரின் அருளால் முழுமையாக அணி செய்யப்பட்டவர். அதனால் அவர் பாவக்கறை ஏதும் இன்றி நம்பிக்கையும் நற்பண்புகளும் நிறைந்த பெண்ணாகி வளர்ந்தவர். மரியாவை போல நாமும் இறையருளை ஏற்று வாழ்ந்தாள் முழுவதும் அதன் வழி நடத்தலுக்கு நம்மை ஆளாக்கினால் எத்தகைய நிறைவையும் உயர்வையும் அடைவோம் என்பதற்கு மரியா உன்னத எடுத்துக்காட்டாக திகழ்கின்றார். ஜெபம் பக்தி முயற்சிகள் விவிலியம் வாசித்தல் திருவழிப்பாடு போன்ற எண்ணற்ற சமய செயல்பாடுகளில் மட்டுமல்ல வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் சந்திப்பிலும் நம்மை தேடி வரும் இறைவனின் அருளை நாம் ஏற்று அனுபவித்து வாழ மரியா நமக்கு அரும்பெரும் மாதிரியாக நின்று அழைப்பு விடுக்கின்றார். ஆகவே மரியாவின் பக்தி முயற்சி என்பது அவரை வணங்குவது மட்டுமல்ல அவரைப் போல் பிறருக்கு உதவி செய்து வாழ்ந்து காட்டுவதே ஆகும்.



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா 17

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

**மரியா ஒரு சமூக பார்வை**

மரியா எவ்வளவு அழகான பெயர், அற்புதமான பெயர், அர்ப்பணிக்கப்பட்ட பெயர், ஆரோக்கியமான பெயர். பெரும்பாலான உலக மக்களின் உதடுகள் அடிக்கடி உச்சரிக்கும் பெயர் அப்படி என்ன இந்த பெயரில் அடங்கி இருக்கிறது ஆம் இந்த பெயர் நமது உயிரில் கலந்த பெயர். நமது நாடி நரம்புகளை சிர்க்க செய்யும் பெயர். மரியா ஆண்டவருக்கு மட்டும் தாய் அல்ல இந்த உலக மக்கள் அனைவருக்கும் தாயாக விளங்குகின்றாள். நமக்காக ஆண்டவர் இடத்தில் பரிந்து பேசும் தாயாக இருக்கிறார். நமது விண்ணப்பங்களை அவரிடத்தில் கொண்டு சேர்க்கும் ஒரு பாலமாக திகழ்கின்றார். இந்த தாயை நாம் எப்படி பார்க்கின்றோம் தாயாக மட்டுமல்லாமல் நம் உடன் பிறந்த சகோதரி யாய், சில நேரங்களில் நமது அன்புக்குரியவராய், நமது ஆசைக்குறியவராய் பலவிதமாய் இவளை பக்தியோடும், பரவசத்தோடு பார்த்து மகிழ்கிறோம். நமது திருச்சபையில் மாதாவின் பக்தி பிரிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. கத்தோலிக்க பக்தி நிகழ்வுகளில் சிறப்பான இடம் பெறுவது மாதாவின் பக்தி. ஆனால், இந்த பக்தி முயற்சிகள் சரியான பாதையை நோக்கி செல்கின்றனவா ? இறையன்பிலும் பிறர் அன்பிலும் வளர உதவுகின்றதா ? மனிதர்கள் மனிதராக வாழ மாதாவின் பக்தி வழிகாட்டுகிறதா? இது எல்லாம் சற்று சிந்திக்கப்பட வேண்டியவை. மாதா மீது நாம் கொண்டுள்ள ஆழமான பக்தி நமக்கு கூறுவது என்ன? நமது மரியின் பக்தி விண்ணில் இருந்து நமக்கு அருளப்பெற்றவைகளை கொண்டு வந்து சேர்க்கும் ஒரு வடிகாலாக நாம் எண்ணுகின்றோம். மனித வரலாற்றில் இவ்வுலகத்தில் வாழ்ந்த பெண்களும் மரியாவைப் போல மிக அதிகமாக போற்றப்படுபவரும், அன்புடன் வணங்கப்படுபவரும் வேறு எவரும் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். ஆண்டவருக்கு அடுத்தபடியாக மரியன்னைக்கு அதிக அளவிலே ஆலயங்கள் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. குருசடிகளும் காணக் கிடைக்கின்றன. திருத்தலங்கள் அவரது புகழையும், பக்தியையும் பரப்புவதற்காகவே தோன்றியுள்ளன. அன்னைக்கான சபைகளும், இயக்கங்களும், அமைப்புகளும்மிக அதிக எண்ணிக்கையில் இருக்கிறது. இவை எல்லாம் நமது திருச்சபையை வளர்ப்பதற்கு உதவுகின்றனவா? சற்று சிந்தித்துப் பார்ப்போம். மரியன்னை மீது நாம் தீராத பக்தி கொண்டிருந்தாலும் அவரை ஆடம்பரமாக சித்தரிக்காமல் ஒரு ஏழை பெண்ணாக கூலி தொழிலாளியாகிய இயேசுவின் மனைவியாக பொருளாதார நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில் இருந்த ஒரு குடும்பத் தலைவியாக நாம் கண்ணுற வேண்டும். யோசேப்புக்கும், அன்னை மரியாளுக்கும் பெத்தலகேமில் வீடுகளிலோ விடுதியிலோ கூட





# அன்னையின் 8 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## நலம் தரும் அன்னைத் திருத்தலம், சொலாரோலோ (Solarolo) எமிலியா ரொமாஞ்ஞா, இத்தாலி பாகம் - 11

கி.பி. 1736 ஆண்டு அன்னையின் திருஉருவம் சொலாரோலோ பங்கு ஆலயத்திலிருந்து, புதிதாக கட்டப்பட்ட ஆலயத்திற்கு பவனியாக கொண்டு செல்லப்பட்டது என்பதையும், அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் கடைசி ஞாயிறன்று இப்பவனியானது அன்னையின் திருத்தலத்தில் தொடங்கி சொலாரோலோ கிராமம் முழுவதும் சென்று மீண்டும் திருத்தலம் வந்தடைகிறது.

மழை, வெயில், பனி, போர், தொற்றுநோய், நிலநடுக்கம் என பல்வேறு இயற்கை பேரிடர்கள் மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு தடைகளுக்கிடையே இப்பவனியானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அன்னையின் திருஉருவம் செல்கிற வழியெல்லாம் இன்றுவரை நோய்களிலிருந்தும், இயற்கை சீற்றங்களிலிருந்தும் காப்பாற்றபட்டு வருகிறது என்பது எல்லோரையும் வியக்க வைக்கும் செய்தியாக உள்ளது.

இந்த திருத்தலம் அமைந்துள்ள சொலாரோலோ கிராமமானது செனியோ (Senio) மற்றும் சென்தெர்னோ (Senterno) நதிகளுக்கிடையில் அமைந்துள்ள சமவெளியல் உள்ளது. கி.பி. 2023ஆம் ஆண்டு மே மாதம் 16 -17 தேதிகளில் பெய்த பெருழையாலும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும் இக்கிராமத்தின் 70% பகுதி பெருமளவு பாதிக்கப்பட்ட போதிலும் அன்னையின் திருஉருவம் பவனி செல்லும் வீதிகள் எந்தவித பாதிப்புக்குள்ளாகமல் இருந்ததாக சொல்லி வியக்கின்றனர் மக்கள். மேலும், கடந்த ஆண்டு செப்டம்பர் இறுதி

ஞாயிறன்று அன்னையின் திருஉருவம் பவனி ஆரம்பிப்பதற்கு முன் பெருமழைக்கான எச்சரிக்கை விடப்பட்டது. அன்னையின் திருஉருவத்தை பவனியாக எடுத்துச் செல்வதா வேண்டாமா என்ற கேள்வி எழுந்த போது, திருத்தலத்தின் பொறுப்பு அருட்பணியாளர். ஆன்னையிடம் வேண்டி பின் பவனி சென்றே ஆகவேண்டும், இத்தனை ஆண்டுகளாக தடையில்லாமல் செல்ல வழிவகுத்த இறைவன் இந்த ஆண்டும் உதவி செய்வார் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராக இறைமக்களின் தூண்டுதலால் பவனியை மேற்கொண்டார். அன்னையின் ஆடம்பர பவனி வழக்கமான பாதையில் சென்று திருத்தலத்தை வந்தடைந்த பிறகு, அரை மணிநேரம் கழிந்த பெருமழையும் அதனைத் தொடர்ந்து மற்றொரு வெள்ளப்பெருக்கையும் சொலோரோலோ சந்தித்ததாம். இங்ஙனம், இயற்கை சீற்றங்களிலிருந்து அன்னை இக்கிராமத்தை பாதுகாப்பது இது முதல் முறையல்ல.

கி.பி. 1748 மற்றும் கி.பி. 1796ஆம் ஆண்டுகளில் இப்பகுதி முழுவதிலும் பெருந்தொற்று ஒன்று ஏற்பட்டு ஆயிரக்கணக்கானவர்களை பாதித்ததோடு, நூற்றுக்கணக்கானவர்களின் இறப்புக்கும் காரணமாக அமைந்தன. இப்பெருந்தொற்று காலங்களில் இக்கிராம மக்கள் நலம் தரும் அன்னையின் பரிந்துரையை நாடினர். அன்னையும் தன் திருமகனிடம் பரிந்து பேசியதால் இக்கிராம மக்கள் காப்பற்றப்பட்டனர்.

கி.பி. 1796ல் நெப்போலியனின் பிரெஞ்ச் படைகள் எமிலியா பிரதேசத்தையும் ஆக்கிரமித்தன. அதில் சொலோரோலோவும் அடங்கும். இத்தாலி முழுவதிலும் ஆலயங்களை அரசு எடுத்துக் கொண்டது போல, இங்கும் ஆலயம் அரசுடைமையாக்கப்பட்டது. ஆலயத்தை பராமரித்த மங்கள வார்த்தை பக்தி இயக்கத்தினரிடமிருந்து, ஆலயமானது கி.பி. 1802ஆம் ஆண்டு நகரஅவையினரால் மற்றொரு குழுவிடம் ஒப்படைக்கபட்டது. நெப்போலியனின் ஆக்கிரமிப்பு காலம் முழுவதும் ஆலய திருவிழா கொண்டாட்டத்திற்கான செலவானது நகரஅவையாலும், புதிய பக்தி இயக்கத்தினராலும் வழங்கப்பட்டது. கி.பி. 1816ஆம் ஆண்டு திருத்தலத்திற்கான இரண்டு மணிக்கூண்டுகள் கட்டப்பட்டன. கி.பி. 1829ஆம் அன்னையின் பக்தி முயற்சிகள் தொடங்கப்பட்ட நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டன. அந்நாட்களில், சொலோரோலோவிலிருந்து அன்னையின் திருத்தலத்தை வயல்களுக்கிடையேயான ஒற்றையடிப்பாதை வழியாக மட்டுமே அடையமுடியும். ஆன்னையின் திருத்தலத்தை அடைய ஒரு முறையான சாலை அமைக்கப்படவேண்டும் என்றும் மக்கள் தொடர்ந்து கிராமசபை





வார்த்தையை வாழ்ந்து இறைவீட்டில் அனைவருக்கும் தாயாக இருப்பது நம் மரியா, கன்னித் தூய்மை கெடாமல் வாழ்ந்த மரியா.

புனித லூக்காவும், கன்னி மரியா மட்டும் சார்ந்து, கடவுளின் திருவுளத்தை நிறைவெற்றத் தன்னைக் கையளித்த தியாக தீபம் என்று கூறுவதை நாம் அறியலாம். உலகின் மீது கடுகளவு உறவில் வாழ்ந்ததாலே அவர் கன்னித் தூய்மையில் வளர்ந்தார். ஒரு செடி உயரே வளர கனி தந்து பயன் வழங்க அந்த செடிக்குப் போதுமான சூரிய ஒளி, சுத்தமான காற்று, வளமான நீர், சிறந்த உரம் அவசியம். அதுபோலவே, ஒரு சாதாரண மனிதன் உயர்வான உன்னதமான தூய வாழ்வு வாழ, தூய்மை நிறைந்த இறைவனின் துணை அவசியம். மரியாவும் கடவுளோடு உண்மையான தூய உறவு கொண்டு, கடவுளின் நிழலில் தினம் நடந்தால், அவர் தூய்மைக் கெடாமல் பாதுகாத்துக் கொண்டார். நமது உறவு கடவுளோடு உண்மையாகவும் உறுதியாகவும் இருக்கும்போது நாமும் கன்னித் தூய்மையில் நிறைந்து நிலைத்து வாழலாம்.

மரியா தூய ஆவியால் நிரப்பப்பட்டதால், தூய்மைமிக்க கன்னியாக, தாயாக செயல்படுகிறார். வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, கடவுளின் செய்தியைச் சொல்லியதும் மரியா, ஆம் எனப் பதிலளிக்கிறார். மறுகணமே தூய ஆவி அவர்மேல் இறங்கியது. இதனால் அவர் தூய்மை மிக்கவராக மாறுகிறார். ஆக, அவரின் தூய்மை நிறைவாழ்வு மரியா தேர்ந்தெடுத்ததைவிட கடவுள் அதைக் கொடையாக கொடுத்துள்ளார். அவரின் கற்பு நெறியானது கடவுளின் உயரிய கொடையாகக் கொடுத்துள்ளார். அவரின் கற்பு நெறியானது கடவுளின் உயரிய கொடை ஆகும். கடவுள் மரியாவை மென்மேலும் ஆசீர்வதித்து உலகின் அரசியாக உயர்த்திப் பாவத்தையும் சாவையும் வெற்றிக் கொள்ளும் வீர மங்கையாக மாற்றினார். மரியா போன்று நாமும் தூய்மையாக வாழ்வோம். கடவுள் நம்மை விண் அளவுக்கு உயர்த்துவார்.

மணமாகாத பெண்ணும் கன்னிப் பெண்ணும் ஆண்டவருக்கு உரியவற்றில் அக்கறை கொள்வதால், அவர்கள் உடலிலும் உள்ளத்திலும் தூயோராகின்றனர். (கொரி 7,34)

இவ்வாறாக, மரியா கடவுளுக்கு உகந்ததை மட்டும் நினைத்துத் தியானித்து வாழ்ந்ததால் அவர் கன்னித் தூய்மையுடன் வாழநாள் முழுவதும் கெட்டுப் போகாமல் வாழ முடிந்தது.

மரியா தனது வாழ்நாள் முழுவதும் கன்னித் தூய்மையில் வாழ்ந்தார் என்று 2-ம் வத்திக்கான் சங்கம் உறுதி அளித்தது.

கன்னி மரியா உடலிலும் கன்னித் தூய்மையாக
உள்ளத்திலும் கன்னித் தூய்மையாக மற்றும்
நம்பிக்கையிலும் கன்னித் தூய்மையாக வாழ்ந்தார் - புனித அகுஸ்தினார்

கடவுளை விட்டு விலகி அவரைப் புறக்கணித்து அவர் காட்டும் பாதையை மறுப்பவன் தனது உடலாலும் உள்ளத்தாலும் பாவம் செய்து தூய்மையற்ற நிலையில் வாழ்கிறான். மாறாக கடவுளின் பிரசன்னத்தில் தினமும் பிரகாசித்து, இறைவார்த்தையை மனதில் தியானித்து இறை வழியில் நடப்பவர் தூய்மையில் வளர்வர். அன்னை மரியா இவ்வாறு வாழ்ந்ததற்கு எடுத்துக்காட்டு. இறைவழியில் நடந்து, கற்பில் ஒளிர்ந்து, ஒழுக்கத்தில் வளர்ந்த உன்னதமான விளக்காகவும், வழிகாட்டும் விண்மீனாகவும் திகழ்பவர் அன்னை மரியா. கடவுளை விட்டு ஒரு நிமிடமும் பிரியாது, கடவுள்மீது தன் கண் பதித்து கை உயர்த்தி, இறைப்புகழ் பாட அவர் சொல்லைக் கேட்டு தன்னையே முழுவதும் கையளித்த நிலையான சரணாகதி அன்னை மரியா. இவ்வாறு கன்னித் தூய்மை கெடாமல் வாழ்ந்த மரியா விசுவாசிகளாகிய நமக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகின்றார். நாமும் நமது வழிபாடுகளில் மரியாவுக்கு வணக்கமும் மரியாதையும் செலுத்துவதோடு நில்லாமல், நமது வாழ்வில் அவர் போன்று தூய உள்ளம் படைக்க வேண்டும். கடவுள் தனது பணிக்கென்று தேர்ந்தெடுத்த மனிதர்களில் மாப்புனிதையாக மரியா விளங்குவதற்கு அடிப்படைக் காரணம் அவர் கற்பின் கருவியாக, ஒழுக்கத்தின் உதயமாக விளங்கி, கடவுளின் அன்புக்கு சாட்சி பகர்ந்ததே ஆகும்.

இன்று மரியா நம் அனைவருக்கும் தாயாகவும், சிறந்த ஆசிரியராகவும் இருந்து பல வழிகளைக் கற்பித்து வருகிறார். கற்பு நெறியோடும், கண்ணியமான, கருணையான, கனிவான தூய உவகையுடன் வாழும் எம் மனிதரும் எதிலும் குறைந்தவர்களும் இல்லை. யாருக்கும் அடிபணிந்தவர்களும் இல்லை. அவர்கள் ஏழ்மை மிக்கவர்களும் இல்லை. ஏளனம் மிக்கவர்களும் இல்லை. மாறாக அவர்கள் கடவுளின் விண்ணரசில் பவளம் போன்று மின்னுபவர்களும் முத்துப் போன்று ஜொலிப்பவர்களும் ஆவர். அவர்கள் மணம் வீசும் மலர் போன்றும், நறுமணம் கமழும் வாசனைப் போன்றும், வளர்பிறைப்போல் தேயா நிலவு போன்றும் கடவுளின் கூடாரத்தின் சிம்மாசனத்தில் அமர்வார்கள். அவ்வாறு தூய வழியில் நடந்து கடவுளின்





நிர்வாகத்திடம் முறையிட்டு கொண்டேயிருந்தனர். ஆனால், சில நில உரிமையாளர்களின் எதிர்ப்பின் காரணமாக அக்கோரிக்கை நிறைவேற்றப்படமலேயே இருந்தது. கி.பி. 1849ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், உரோமை குடியரசு அமைக்கப்பட்டதாக செய்திகள் வெளியான உடன், ஒரு குழப்பமான சூழல் நிலவியது. அச்சூழலில் மக்கள் உடனடியாக அன்னையின் திருத்தலத்தை அடைய நல்ல பாதையை அமைத்தனர். இப்பணிகளானது கி.பி. 1854ஆம் ஆண்டு மே மாதம் நிறைவுற்றன. கி.பி. 1855ஆம் ஆண்டு இத்தாலி முழுவதும் காலரா பரவிய பொழுது, இப்பகுதியில் பாதிப்புகள் மிகக் குறைவாகவே இருந்தன. உடனே, அன்னைக்கு நன்றி செலுத்தவும், தங்களின் பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கும் வகையிலும், அப்பகுதி மக்கள், ஒரு பாவபரிகார பவனியை மேற்கொண்டனர்.

அன்னை தங்களுக்கு தொடர்ந்து அளித்துவரும் பராமரிப்பிற்கு நன்றி செலுத்துவிதமாக, அன்னையின் திருஉருவத்திற்கு தங்க கிரீடமானது அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட காலமாக வத்திக்கான் திருப்பீடத்திற்கு மக்கள் எழுப்பிக் கொண்டேயிருந்தனர். அக்கோரிக்கைக்கு வலுசேர்க்கும் விதமாக, பேரருட்திரு. ரபேயேலே பெத்தெல்லியும், ஆலயப் பொறுப்பு தந்தை அருட்பணி. லுயிஜி கபிரெல்லி அவர்களும் வத்திக்கான் திருப்பீடத்திற்கு மீண்டும் ஒரு கோரிக்கையை அனுப்பினர். அக்கோரிக்கையானது, கி.பி. 1879ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி ஏற்கப்பட்டது. பின், மே மாதம் 18ஆம் தேதி வத்திக்கான் பிரதிநிதி பேராயர் பிரான்செஸ்கோ பொலியாதி அன்னையின் திருஉருவத்திற்கு தங்க கிரீடம் அணிவித்து மரியாதை செலுத்தினார். இத்திருநிகழ்வில் பயென்சா நகர் ஆயரும் கலந்துகொண்டு மறையுரை ஆற்றினார். எட்டு நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் ஏற்குறைய பத்தாயிரம் மக்கள் பங்கெடுத்தனர்.

கி.பி. 1929ஆம் ஆண்டு அன்னையின் பக்தி முயற்சிகள் தொடங்கப்பட்ட இரண்டாம் நூற்றாண்டு விழாவானது, பேரருட்திரு ஜிசப்பே பபினி அவர்களின் முன்முயற்சியால், கர்தினால் மிக்கேலே லேகா தலைமையில் மே மாதம் 12ஆம் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் மிகப்பெரிய சேதங்களை இத்திருத்தலத்திற்கு உருவாக்கியது. கி.பி. 1944ஆம் ஆண்டு டிசம்பர் முதல் கி.பி. 1945ஆம் ஏப்ரல் வரை செனியோ நதிக்கரை பெரும்

போர் களமாக இருந்தது. அந்நாட்களில் அப்பகுதியில் பெருத்த உயிர் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டன. ஆலயமும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆலயத்திலிருந்து அன்னையின் திருஉருவம் பத்திரமாக மீட்கப்பட்டு அருகில் இருந்த மங்களவார்த்தை அன்னை ஆலயத்தில் வைக்கப்பட்டது. போருக்கு பின் ஆலயம் சீரமைக்கப்பட்டு அன்னையின் திருஉருவம் மீண்டும் அங்கு நிறுவப்பட்டது. கி.பி. 1963ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9ஆம் தேதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஆலயம் மீண்டும் முற்றிலுமாக சேதடைந்தது. கி.பி. 1970ஆம் ஆண்டு வரை ஆலயம் மூடப்பட்ட நிலையில், அன்னையின் திருஉருவமானது பங்கு ஆலயத்தில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்தது.

பல்வேறு முயற்சிகளுக்கு பிறகு, பல உபகாரிகளின் பேருதவியால் ஆலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு, கி.பி 1987ஆம் ஆண்டு ஆகஸ்டு 29ஆம் தேதி அர்ச்சிக்கப்பட்டது. அதே நாளில், அன்னையின் திருஉருவமானது பங்கு ஆலயத்திலிருந்து மீண்டும் கொணரப்பட்டு மீண்டும் திருத்தலத்தில் நிறுவப்பட்டது. இன்றளவும், பல்வேறு பகுதிகளிலிருந்து அன்னையின் பரிந்துரையை நாடி மக்கள் வந்த வண்ணம் இருக்கின்றனர். அன்னையிடமிருந்த தாங்கள் பெற்று கொண்ட பேருபகாரங்களுக்கு நன்றியாக பக்தர்கள் செலுத்திய காணிக்கை பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

புகழ்பெற்ற இத்தாலிய பாடகி லவுரா பவுசினி (Laura Pausini) தன் குழந்தை பருவம் முதல் வளர்ந்தது சொலாரோலோவில்தான். தன்னுடைய வாழ்வின் மறக்கமுடியாத இந்த ஊரில் தான் பெற்ற விருதுகளை கொண்ட காட்சியகம் ஒன்றையும் வைத்துள்ளார். அதற்கெல்லாம் மேலாக நலம் தரும் அன்னையிடம் அபரிமிதமான பக்தி கொண்டவராகவும் உள்ளார். எப்பொழுதெல்லாம் ஊருக்கு வருகிறாரோ அப்பொழுதெல்லாம் ஆலய வழிபாட்டில் பங்கெடுப்பதோடு, ஆலயப் பாடகர் குழுவிலும் பாடுகிறார் என்பதும் வியப்புக்குள்ளாக்குகிறது. தன் வேர்களை மறக்காத ஒருவர் இவர் என்பது உண்மையே.

அன்னையை நாடுவோம்! அருள் வளங்களை பெறுவோம்!!





# மாதா மன்றாட்டு மாலை

10



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## கன்னித் தூய்மை கெடாத மாதாவே

அன்னை மரியா, கன்னித் தூய்மை கெடாத மாதா என்று தாயாம் திருச்சபையும், பக்தர்களும் அழைத்து வருவது நமக்கெல்லாம் பெருமை. சென்ற மாத இதழில் பழுதற்ற கன்னியாய் இருக்கிற மாதாவே என்ற தலைப்பில் தியானித்தோம். இந்த இதழிலும் அதன் தொடர்ச்சியாக தியானிக்கின்றோம். மரியா ஜெபம் செய்வதில் தாராள மனமும், பக்தி முயற்சியில் தணியாத தாகமும் கொண்டிருந்தார். இதனால் அவர் கற்பு நெறியில் நடந்து கன்னித் தூய்மையில் நிலைத்திருந்தார்.

பாலைவனத்தில் இயேசு சோதிக்கப்படுமுன் தூய ஆவியால் நிரப்பப்பட்டார். தூய ஆவியின் துணையால் சாத்தானை வென்றார். அதுபோலவே, மரியாவும் தனது மண்ணக வாழ்வில் தூய ஆவியாலும் கடவுளின் அருளாலும் நிரப்பப்பட்டார். தூய ஆவியின் துணையால் உலகின் பாவக் கறையிலிருந்தும் தீய இச்சைகளிலிருந்தும் உடல் பெறும் சிற்றின்ப ஆசைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டார். மரியாவின் பிறப்பு முதல் இறப்பு வரை அவர் தூய ஆவியால் நிரப்பப்பட்டதால் கன்னித் தூய்மை கெடாத அன்னையாகத் திகழ்ந்தார். தூய ஆவி வழியாக மரியா ஞானத்திலும் நம்பிக்கையிலும் வளர்ந்தார். தனது முழு வலிமை, முழு ஆற்றல், முழு மனதோடு கடவுளை அன்பு செய்ததோடு, இறைவாக்கினர் விடுக்கும் அழைப்புக்கும் மரியா பணிவோடும் கனிவோடும் செவிமடுத்தார். தொழுகைக் கூடத்திலும், தனது வீட்டிலும் மரியா ஒழுக்க நெறியுடன் வாழும் அறிவையும், கடவுளுக்கு கீழ்படிந்து தியாக தீபமாக பொறுமையின் பொக்கிஷமாக, அன்பின் அடித்தளமாக வாழும் கலையையும் பெற்றார். இதுவே மரியா கன்னித் தூய்மையில் நிலத்திருக்க உதவிய சாதனமாகும்.

4-ம் நூற்றாண்டுக்கு பிறகுதான் கன்னித் தூய்மை கெடாத மாதா என்ற உண்மை உலகின் பல பகுதிகளுக்குத் தெரிய வந்தது.



# புனித பிலிப்பு பெனிசி OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

புனித பிலிப்பு பெனிசி 1233 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் பிளாரென்ஸ் நகரில் பிறந்தார். இவர் பிறந்த இந்த நன்நாளில் நமது ஏழு புனித தந்தையர்களும் அன்னை மரியாவிடமிருந்து காட்சி பெற்று நமது சபையை தொடங்கினர். எனவே, நம் புனிதர் பிறந்ததும், நமது சபை பிறந்ததும் ஒரே நாளில்தான். புனித பிலிப் பெனிசி ஒரு உயர் வர்க்க பணக்கார குடும்பத்தை சார்ந்தவர். தனது 13 ஆம் வயதிலேயே, பிரான்ஸ் நாட்டில் உள்ள பாரிஸ் நகருக்கு படிப்பிற்க்காக அனுப்பி வைக்கப்படுகிறார். மருத்துவத்தில் பட்டம் பெற்று சொந்த ஊருக்கு திரும்புகிறார். அன்னை மரியாவினால் உந்தப்பட்டு, நமது புனித தந்தையர்களின் சகோதர அன்பினால் ஈர்க்கப்பட்டு, புதியதாக தொடங்கப்பட்ட சபையில் சேருகிறார். ஒரு சாதாரண சகோதரனாக இருக்கவே எண்ணி தனது துறவற வாழ்க்கையை தொடங்கினார். எவ்வாறு மலை மேல் உள்ள ஒளி தன்னை மறைத்துக்கொள்ள முடியாதோ, அதேபோல், தன்னுடைய அறிவாற்றலையும், இறைஞானத்தையும் அவரால் மறைத்து வைக்க முடியவில்லை. பல தருணங்களிலும் தனது இறைஞானத்தை வெளிப்படுத்திய, நம் புனிதரை, குருவாக திருநிலைப்படுத்தினார்கள். மேலும் அவருடைய இறைப்பணி தலைமை பொறுப்புகளிலும், தேவைப்பட்டது. எனவே, அவரை சபை தலைவராக தேர்வு செய்தார்கள். ஏறத்தாழ 19 ஆண்டுகள் நமது சபையை, பல்வேறு சவால்களுக்கு இடையே வழிநடத்தினார். திருத்தந்தை நான்காம் கிளெமென்ட் இறந்த பின், புனித பிலிப் பெனிசியை திருத்தந்தையாக தேர்வு செய்தனர். ஆனால், அதை அவர் ஏற்க மறுத்து விட்டார். எனவேதான், அவருடைய உருவத்திற்கு கீழே, ஒரு திருத்தந்தையின் கிரீடமும், அவரின் கையில் சிலுவையும் இருக்கும். மேலும், இவர் சபை தலைவராக இருந்த காலத்தில், பல சபைகள் உருவாகி கொண்டிருந்தன. இதை கட்டுப்படுத்த திருத்தந்தை அனைத்து யாசக சபைகளையும் மூடிவிடவும் அல்லது ஏற்கனேவே இருக்கும், சபைகளோடு இணைத்துக்கொள்ள கட்டளை இட்டார். இந்த மூடப்பட வேண்டிய சபைகளில் நமது சபையும் அடங்கும். புனித பிலிப் பெனிசி தனது குடும்பத்தின் சொத்துக்களை, சபைக்கு கொடுத்து, நமது சபையை மீட்டார். இதே போல் பல முக்கியமான செயல்களை நம் சபைக்காக செய்துள்ளார். எனவேதான், இவரை நம் சபையின் ஒளி என்று நாம் அழைக்கிறோம். தனது இறுதி காலத்தில் தோடி என்கிற ஒரு சிறிய ஊரில் இருந்த நமது மடத்தில், ஏழ்மையான வாழ்வு வாழ்ந்து மரித்தார். அவர் இறக்கும் தருவாயில் இருக்கும் போது, புனித நூலை தருமாறு கேட்டுக்கொண்டார். அவர்கள் பல நூல்களை தந்தும் அவர் அதை மறுத்து விட்டார். அதன்பின், பாடுபட்ட சிலுவையை கேட்டு வாங்கி கொண்டார். இந்த சிலுவையே எனது புனித நூல் என்று கூறி, 1285 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். அவரினால் பல புதுமைகள் நடந்துள்ளதை வரலாற்றில் பதிவு செய்துள்ளார்கள். 1671 ஆம் ஆண்டு திருஅவையினால் புனிதராக அறிவிக்கப்பட்டார்.










திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## ரூத்து, சாமுவேல் I



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21




**வலமிருந்து இடம்**

3) என் திட்டத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்பச் செயல்படும் நம்பிக்கைக்குரிய ஒரு குருவை நான் ……………. அவனுக்கு ஒரு நிலையான வீட்டைக் கட்டி எழுப்புவேன். அவன் எந்நாளும் என்னிடம் திருப்பொழிவு பெறுபவனுக்குப் பணி செய்வான்.

4) ஊர்ப் பெண்கள் நகோமியைப் பார்த்து, ஆண்டவர் ………… போற்றி! போற்றி! உன்னைக் காக்கும் பொறுப்பினை உடையான் ஒருவனை அவர்தாம் அருளியுள்ளாரே: இஸ்ரயேலில் அவனது பெயரும் புகழுடன் ஓங்கித் திகழுவதாக!

7) அவருக்குச் சவுல் என்ற இளமையும் ………… கொண்ட ஓர் மகன் இருந்தார். இஸ்ரயேலின் புதல்வருள் அவரைவிட அழகு வாய்ந்தவராய் எவரும் இலர். மற்ற அனைவரையும் விட அவர் உயரமானவர். மற்ற அனைவரும் அவர் தோள் உயரமே இருந்தனர்.

8) …………… அவர்கள் நீரளங்களை ஏமாற்ற வில்லை, ஒடுக்கவில்லை, கைப்பூட்டு யாரிடமும் பெறவில்லை என்றார்கள்.

11) சவுலை அரசனாக்கியதற்காக நான் வருந்துகிறேன். ஏனெனில் ………….. என்னை பின்பற்றாமல் விலகிவிட்டான். என் வார்த்தைகளின்படி நடக்கிவல்லை. சாமுவேல் மனம்வருந்தி இரவெல்லாம் மன்றாடினார்.

13) ஆனால் அமாவாசைக்கு அடுத்த நாளும் தாவீதின் இருக்கை காலியாக இருந்தது. அப்பொழுது சவுல் யோனத்தனை நோக்கி, ஈசாயின் மகன் நேற்றும் …………… உணவருந்த வராதது ஏன்? என்று கேட்டார்.

**இடமிருந்து வலம்**

1) நாகோமியின் சொந்த நாட்டில் ……………. தம் மக்களைக் கருணையுடன் கண்ணோக்கி, அவர்களுக்கு உணவு கிடைக்கும்படிச் செய்தார்.

2) ஆண்டவர் சாமுவேலிடம் கூறியது: இதோ கேட்பார் …………….. இரு காதுகளும் அதிர்ச்சியடையக்கூடிய ஒரு செயலை இஸ்ரயேலில் செய்யப்போகிறேன்.





ஞானத்தை உள்ளடக்கியது என்றும் அவற்றைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

சட்டங்களாக இருந்தாலும் சரி வழிபாட்டு நெறிமுறைகளாக இருந்தாலும் சரி அவற்றின் நோக்கம் கடவுளை திருப்திபடுத்துவது அல்ல மாறாக மனிதர்களாகிய நமது உள்ளத்தை பண்படுத்தி பிறர்மீது அக்கறை உள்ள மனிதர்களாக வாழ வழிசெய்வதே. யாக்கோபு இதைதான் இன்றைய இரண்டாம் வாசகத்தில் கூறுகிறார். கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமய வாழ்வு எதுவெனில் துன்புறும் அநாதைகளையும் கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால் கறைபடாதபடி தன்னைக் காத்துக் கொள்வதும் ஆகும்.

**மன்றாட்டுக்கள்**

1.அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது அன்புக் கட்டளைகளை வாழ்வாக்கி உமக்கும் உம் மக்களுக்கும் பணிபுரிந்திட தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா எம் நாட்டுத் தலைவர்கள் மக்களுக்கு நலன் பயக்கும் சட்டத் திட்டங்களை உருவாக்கி செயல்படத்திட தேவையான இறைஞானத்தை அளித்திட தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் நீதியின் அடிப்படையில் அல்ல இரக்கத்தின் அடிப்படையில் செயல்பட தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் புறத்தூய்மையை விட அகத்தூய்மை மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து எங்கள் சிந்தனைகள், சொற்கள் உமக்கு உரியவையாக அமைந்திட தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5.பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்றுரைத்த இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் ஏழைகள், அநாதைகள், விதவைகள், முதியவர்கள் இவர்களுக்கு உதவி செய்து வாழ்கின்ற தாராள மனதை தந்திட தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

விசுவாசம் எப்போதும் செயல்பாடுமிக்க விசுவாசமாக அமைய அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. அன்பின் இறைவா, திருமணம் என்னும் அருட்சாதனத்தால் இணைக்கப்பட்ட உம் பிள்ளைகள், திருமணத்தில் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளில் நிலைத்து நின்று திருமணத்தின் புனிதத்துவத்தையும் மாண்பையும் உணர்ந்து முன்மாதிரியுள்ள தம்பதியர்களாக வாழ அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலத்தின் 22-ம் ஞாயிறு(01.09.2024)

### இ.ச. 4:1,2,6-8 யாக் 1:17,18,21,22,27 மாற் 7: 1-8,14,15,21-23

**முன்னுரை**

மனிதன் படைப்பாற்றல் மிக்கவனாக இருந்தாலும் வாழ்வின் ஆழத்தை, அர்த்தத்தை உணர்வதற்கு சமய சடங்குகள், மரபுகள், குறியீடுகள் அவசியமே. ஆனால் இவைகளை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே நாம் சிந்திக்கும் மிகப் பெரிய கேள்வியாக அமைந்துள்ளது. மனித உறவை பலப்படுத்துவதிலும் சமூகத்தை வளர்த்தெடுப்பதிலும் சமயம் மற்றும் அதனைச் சார்ந்த குறியீடுகள் வளர்ச்சியினை நோக்கியதாகவே அமைய வேண்டும். சமய சடங்குகள் மரபுகள் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவில் விரிசலை உருவாக்காமல், அதை சீர்படுத்தி, புனிதப்படுத்தி, மனிதனின் நிறைவை புனிதமாக அமைய வேண்டும். புறத் தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து அகத்தூய்மையை புறக்கணியாமல் தூய்மை என்பது வெளி அடையாளத்தில் அல்ல மாறாக செயலாக்கம் பெற செய்வதே என்பதை உணர்ந்து வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. மனதையும் செயலையும் தேடாத சட்டத்திட்டங்கள் தேவையுமில்லை வேண்டியதுமில்லை என்கிறார் இயேசு.

இன்றைய காலக்கட்டத்தில் நாம் கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படையாக மட்டும் வாழாமல் உள்ளத்தில் தூய்மை பெற்று அதை செயலில் செயல்படுத்துகின்ற உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

சட்டங்கள் மனித மகிழ்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் அவசியமானவை. சட்டங்கள் இல்லாத சமுதாயம் கடிவாளம் இல்லாத குதிரையைப் போன்றது. எனவே இறைவனே இஸ்ரயேல் மக்கள் வளர்ச்சிக்காக சட்டங்கள் தருவதை இன்றைய முதல் வாசகம் சுட்டிக் காட்டுகின்றது. மோசே உடன்படிக்கையின் வரலாற்றை நினைவூட்டி இறைவனின் சட்டங்களை விளக்குகின்றார். இறைவனின் சட்டங்கள்





5) ஆண்டவரது உடன்படிக்கைப் பேழை பாழையத்திற்குள் வந்ததும், இஸ்ரயேல் ………… நிலமே அதிரும் அளவிற்குப் பெரும் ஆரவாரம் செய்தனர்.

6) பெலிஸ்தியர் குற்ற நீக்க பலியாக ஆண்டவருக்குச் செலுத்திய மூலக் கட்டிகளின் பொன் உருவங்கள் இவையே: அஸ்தோதுக்கு ஒன்று, …………… ஒன்று, அஸ்லோனுக்கு ஒன்று, மாதத்திற்கு ஒன்று, எக்ரோனுக்கு ஒன்று.

9) எபிரேயர் தங்களுக்காக வாள்களையும் ஈட்டிகளையும் செய்து கொள்ளக் கூடாது என்று பெலிஸ்தியர் திட்டமிட்டுயிருந்தால், இஸ்ரயேல் நாடெங்கும் ……………… எவனும் காணப்படவில்லை.

10) மாறாக, 'எங்களிடம் வாருங்கள்' என்று சொன்னால் நாம் அவர்களிடம் சொல்வோம். …………. அவர்களை நம்மிடம் ஒப்படைத்துள்ளார் என்பதற்கு இதுவே அடையாளமாய் இருக்கும்.

12) தாவீது விடியற் காலையில் எழுந்து ஆடுகளைக் ………….. ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டு, உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு, ஈசாய் தமக்குக் கட்டளையிட்டவாறு புறப்பட்டுச் சென்று பாசறையை அடைந்தார்:

**மேலிருந்து கீழ்**

1) எல்கானா …………… சீலோவில் படைகளின் ஆண்டவரை வழிபடவும் அவருக்குக் பலி செலுத்தவும் தம் நகரிலிருந்து சென்று வருவார்.

4) இஸ்ரயேல் வீட்டார் அனைவருக்கும் சாமுவேல் கூறியது: 'நீங்கள் முழுஉள்ளத்தோடு .ஆண்டவரிடம் …………… வேற்றுத் தெய்வங்களையும் அஸ்தரோதையும் உங்களிடமிருந்து அகற்றி விடுங்கள். உங்கள் உள்ளங்களை ஆண்டவருக்காத் தயார் செய்யுங்கள்.

5) அஸ்தோதின் மக்களை ……….. படியாக ஆண்டவரின் கை அவர்களை வன்மையாகத் தாக்கியது. அஸ்தோது வாழ் மக்களையும் அதன் எல்லைக்கு உட்பட்டவர்களையும் அவர் மூலக் கட்டிகளல் வாட்டி வைத்தனர்.

7) சாமுவேல் மக்களை மிஸ்பாவில் ஆண்டவர் திருமுன்……………

9) இஸ்ரயேலர் தங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியினால் இன்னலுற்று குகைகளிலும், புதர்களிலும், பாறைகளிலும், கல்லறைகளிலும், பள்ளங்களிலும் ஒளிந்து...............

11) ஈசாயைப் பலிக்கு அழைத்திடு: அப்போது நீ என்ன செய்யவேண்டியதென்று நான் உனக்கு ………… நான் உனக்கு காட்டுகிறவனை நீ எனக்குத் திருப்பொழிவு செய்' என்றார்.

12) அடுத்து அவரே இராமாவுக்கு சென்று, சேக்குவிலிருக்கம் பெரிய கிணற்றருகே வந்து, சாமுவேலும் தாவீதும் எங்கே?, என்று கேட்டார். இதோ இராமாவிலுள்ள நாவோத்தில் அவர்களைக் ………… என்றான்.

**கீழிருந்து மேல்**

2) நகோமி ………….. அப்படியா? வாழ்வோருக்கும் இறந்தோர்க்கும் என்றும் பேரன்பு காட்டும் ஆண்டவர் அவருக்கு ஆசி வழங்குவாராக' என்றார்.

3) அதற்கு அவர் 'என் மகளே, ஆண்டவர் உனக்கு ஆசி வழங்குவாராக! நீ இது வரை காட்டிய குடும்பப் பற்றை விட இப்போது காட்டும் குடும்பப் பற்றே மேலானது …………..

6) கிரியத்து எயாரிமின் ஆள்கள் வந்து ஆண்டவரின் பேழையைத் தூக்கிச் சென்று, குன்றின் மீதிருந்த அபினதாபின் வீட்டில் வைத்தனர். ஆண்டவரின் பேழையை ………….. படி அவன் மகன் எல்யாசரைத் திரு நிலைப்படுத்தினர்.

8) இதோ! ஓர் …………. இவர் உங்களை வழிநடத்துவார். எனக்கோ வயதாகித் தலைநரைத்து விட்டது. என் புதல்வர்தாம் இருக்கின்றனர்.

13) ஆதலால் குரு அவருக்கு தூய அப்பத்தை அவருக்கு அளித்தார்: ஏனெனில் ஆண்டவனின் திரு முன்னிலையில் அப்பத்தைத் தவிர வேறு அப்பம் அங்கு …………...அது எடுக்கப்படும் நாளில் அங்கு சூடான அப்பம் அங்கு வைக்கப்படும்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-08-2024

# யார் அவர்? ⑮

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



தீது இல்லா மனிதம் ஒன்றை - இந்த
பூமி கண்டது தெரியுமா?
பேறு கொண்ட மாது அவராம் - எனும்
சேதி யாவது தெரியுமா?
ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்பே – அவர்
வீர மங்கை தெரியுமா?
இருபது பாரதிகள் உதிர்க்கும் முன்பே – அவர்
புதுமைப் பெண் தெரியுமா?
கன்னி கெடாது கரு தரித்த – பெரும்
புண்ணிய வதியைத் தெரியுமா?
இன்றும் என்றும் கன்னி யாக – நாம்
அழைப்பது யாரைத் தெரியுமா?
ஆதி மனிதன் படர்ந்த போதே – அவரை
வேதம் சொன்னதே தெரியுமா?
பாவம் உலகில் நுழைந்த போதே – அவரின்
தேவை வந்ததே தெரியுமா?
தேவன் தனக்கு வேண்டு மென்று – யாரைத்
தெரிவு செய்தார் தெரியுமா?
தேவ சித்த கருவி யாகத் - தன்னை
மாற்றிக் கொண்டவர் தெரியுமா?
உயர்ந்த இடத்தில் வைத்த போதும் - தன்னை
அடிமை யாக்கியவர் தெரியுமா?
உலக மீட்பர் மெசியா அவரைத் - தம்
உதிரம் ஏற்றவர் தெரியுமா?
பல இடங்களில் பலப் பெயர்களில் - இனம்
வலம் வருபவர் தெரியுமா?
பக்த கோடிகள் யுத்த பூமியில் - பெரும்
மொத்தம் கொண்டவர் தெரியுமா?
அன்னை மரி கன்னி மரி – என்று
அன்போடு அழைப்பவர்தாம் தெரியுமே!
மண்ணில் வாழும் மாந்தர்க் கெல்லாம் - அவர்
விண்ணின் வழி தெரியுமே!





வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் உண்மையான மகிழ்ச்சிக்கும் செயலாக்கம் தருவது நாம் பயன்படுத்தும் வார்த்தைகளே ஆகும். இன்றைய நற்செய்தியில் இயேசுவின் வார்த்தைகளை உள்வாங்கி புதிய வடிவம் கொடுக்கும்போது, புனித பேதுரு போல வாழ்வுதரும் வார்த்தைகள் நமதாக்கப்படும்.

**முதல் வாசக முன்னுரை**

இஸ்ரயேல் மக்கள் உண்மையான கடவுளுக்கு ஊழியம் புரிந்தாலும் பிற இன தெய்வங்களையும் வழிபட்டு இருமனத்தோராய் வாழ்ந்தனர். இந்த நிலையில் யோசுவா அம்மக்களிடம் நான் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் புரிவோம் என்று திட்டவட்டமாக கூறினார். அவ்வாறே எல்லோரும் இயேசுவை விட்டு சென்றாலும் நாங்கள் யாரிடம் செல்வோம் என்றார் பேதுரு. நாமும் யோசுவாவைப் போலவும் பேதுருவைப் போலவும் வாழ்வு தரும் வார்த்தைகள் ஆண்டவரிடமே உள்ளது என்று இறைவனில் நம்பிக்கைக் கொண்டு வாழ அருள் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள உறவை நாம் வாழ்வில் காட்ட வேண்டும் என்கிறார் புனித பவுல். இயேசு எவ்வாறு திருஅவையை அன்பு செய்தாரோ அதே அன்பை குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பிரதிபலிப்பதன் மூலம் நாம் நம்முடைய உடன்படிக்கையை புதுப்பிக்கிறோம். நாம் கொடுத்த வாக்குறுதிக்கு உண்மையுள்ளவர்களாக வாழ அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1.அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களது கிறிஸ்தவ விசுவாச அர்ப்பண வாழ்வில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு எந்நாளும் பிரமாணிக்கமாக வாழ அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் பிறருக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும், மன உறுதியையும், ஒற்றுமையையும் தருகின்ற வார்த்தைகளாக அமைய அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது அரசியல், சமூக, சமய தலைவர்கள் வார்த்தை ஜாலங்களால் மக்களை ஏமாற்றாமல் மக்களுக்கு தருகின்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற கூடிய இறைஞானத்தை அவர்களுக்கு அளித்திட அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் எவற்றை பிறருக்கு போதிக்கிறோமோ அவற்றை வாழ்வாக்கவும் எங்களது

தேவையான இறையருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3.அன்பின் இறைவா, நற்கருணையில் நீர் மெய்யாகவே பிரசன்னமாக இருக்கின்றீர் என்ற மறையுண்மையை விசுவசித்து, உமது இரண்டாம் வருகை வரை உமது மரணத்தையும் உமது உயிர்ப்பையும் உமது வருகையையும் பிறருக்கு அறிவித்திட தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4.அன்பின் இறைவா, உமது திருப்பலியில் விசுவாசத்தோடு கலந்து கொள்கின்ற நாங்கள் ஒவ்வொருவரும் உமது மதிப்பீடுகளாகிய அன்பு, பரிவு, மன்னிப்பு, இரக்கம் இவற்றை வாழ்வாக்கிட தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5.அன்பின் இறைவா, பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழும் குடும்பங்கள் உமது இரக்கத்தால் இணைந்து வாழ்ந்திடவும், அமைதி, ஒற்றுமை இழந்து இருக்கின்ற குடுஅமமை9ம்பங்கள் அவற்றை மீண்டும் பெற்று நம்பிக்கையோடு மகிழ்ச்சியோடு வாழ அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 21-ம் ஞாயிறு(25.08.2024)**
**யோசுவா 24:1-2,15-18 எபே 5:21-32 யோவா 6: 60-69**

**முன்னுரை**

ஒரு மனிதனை வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அழைத்துச் செல்வது அவனது வார்த்தைகளே. கனிவான வார்த்தைகள், கடுமையான வார்த்தைகள், பாசமிகு வார்த்தைகள், சான்றோர்களின் அன்பு வார்த்தைகள், சுயநலவாதிகளின் போலி வார்த்தைகள் என்று பல வார்த்தைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயேசு பேசிய அன்பு வார்த்தைகள் நம்பிக்கை இழந்த இதயங்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலைத் தேடும் இதயங்களுக்கு ஆறுதலையும், வாழ்க்கையினை இழந்தவர்களுக்கு வாழ்க்கையினையும் அருளிய இறை மொழிகள் ஆகும். அவரது வார்த்தைகளினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. மனப் பாரங்கள் அகற்றப்பட்டன, நோய்கள் நீங்கின, விடுதலை கிடைத்தன. அவரது வார்த்தைகள் இதமான உறவையும் இறைவனது பிள்ளைகளாக வாழவும் வழிவகுத்தன. அவரது வார்த்தையும் செயலும் ஒன்றோடு இணைந்து பயணித்தன.

இன்றைய சூழ்நிலையில் குடும்ப வாழ்விலும், துறவற வாழ்விலும் தங்கள் பணிகளை மேற்கொள்ளும்போதும் நாம் கொடுக்கும் வாக்குறுதிகளை, வார்த்தைகளை சொல்வதில் மட்டுமல்ல அதில் இறுதிவரை நிலைத்துநின்று இயேசுவைப் போல் வாழ்ந்து வாழ்வாக்கிட வேண்டும். ஆனால் பல சமயங்களில் நாம் சொல்லும் வார்த்தைகளும், கொடுக்கும் வாக்குறுதிகளும் வெறும் வார்த்தைகளாக இருக்கிறதே தவிர வாழ்வாக்கப்படவில்லை என்பதே நிதர்சன உண்மை. நம்மை





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலத்தின் 19-ம் ஞாயிறு(11.08.2024)**
**1 அர 19:4-8 எபே 4:30 -5:2 யோவா 6: 41-51**

**முன்னுரை**

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. அதனால்தான் கடவுள் மனிதனை படைத்தவுடன் முதல் செயலாக உணவு அளித்தார் என்கிறது தொடக்க நூல் 1:29. இயேசு பசித்த மக்களுக்கு உணவு கொடுத்துவிட்டு அதையும் தாண்டி ஆன்ம உணவைப் பற்றி தெளிவாக்குகிறார். அந்த உணவு இயேசு தரும் உணவாகும். அவர் நம்மீது கொண்ட பேரன்பால் தனது உடலையே நமக்கு கொடுத்தார். நாம் நிலை வாழ்வு பெற இயேசு கொடுத்த முதல் மருந்து அவரில் நம்பிக்கை கொள்வதாகும். நம்பிக்கையில் நிலைத்து நிற்க அவர் கொடுத்த இரண்டாவது மருந்து அவரின் வார்த்தைகளை நேசித்து வாழ்வாக்குவதாகும். நிறைவாக இயேசு தரும் மூன்றாவது மருந்து அவருடைய திருவுடலாகும். வானினின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு நானே. இதை உண்டால் அவன் என்றுமே வாழ்வான் என்று இயேசு சுட்டிக்காட்டுகிறார் இன்றைய நற்செய்தியில்.

இயேசுவின் திருவுடலை நாமும் உட்கொண்டு அவரது பேரன்பில் நிலைத்து அவர் தரும் நிலைவாழ்வைப் பெற இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

அன்று எலியா எவ்வாறு ரொட்டித் துண்டின் உதவியால் வல்லமை பெற்று தனது பாலைவனப் பயணத்தை தொடர்ந்தாரோ அதேப்போலக் கிறிஸ்தவர்களாகிய நாமும் நற்கருணையிலிருந்து வல்லமை பெற்று, நம்முடைய வாழ்க்கை பயணத்தைத் தொடர அழைக்கப்படுகிறோம். வாழ்வின் ஊற்றாக நமக்குத் தரப்பட்ட மாபெரும் கொடைதான் நற்கருணை. வாழ்வு தரும் உணவு நானே என்று இயேசு கூறியது சோர்வின்போது சக்தியும், துயரத்தின் போது ஆறுதலும், வலுவின்மையின்போது வல்லமையும் தரும் உணவு நானே என்ற மறையுண்மையை உணர்ந்தவர்களாக இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நற்செய்தியை வாழ்வாக்குகின்ற போது எதிர்வருகின்ற முணுமுணுப்புக்கள், எதிர்ப்புக்களை கண்டு பின்வாங்காமல்

மனதிடத்தோடும் மனவல்லமையோடும் இயேசுவின் அன்புக் கட்டளைகளை வாழ்வாக்க புனித பவுல் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். நமது கிறிஸ்தவ விசுவாச பயணத்தில் உண்டாகும் உடல் சோர்வுக்கு உணவும், உள்ளச் சோர்வுக்கு தனது திருவுடலையும் கொடுத்தார் இயேசு. ஆண்டவர் எவ்வளவு இனியவர் என்று சுவைத்துப் பாடுங்கள் என்னும் சங்கீத ஆசிரியரின் கூற்றுக்கு இணங்க நற்கருணையை நாளும் சுவைத்து அவரது அன்புக் கட்டளைகளை வாழ்வாக்குவோம்.

**மன்றாட்டுக்கள்**

1.அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் தங்களது அர்ப்பண வாழ்வில் உமது திருவுளத்தை நிறைவு செய்ய தேவையான உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2.அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் நற்கருணையின் புனிதத்துவத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து அடிக்கடி திருப்பலியில் பங்குபெற்று நற்கருணையின் அருளையும் வல்லமையையும் பெற்று வாழ தேவையான உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3.அன்பின் இறைவா, உமது திருவிருந்தில் பங்கு பெறுகின்ற நாங்கள் ஒவ்வொருவரும் தியாகத்திலும், தாழ்ச்சியிலும் வளர்ந்து நற்கருணையின் மக்களாக வாழ உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4.அன்பின் இறைவா, வறுமையினாலும், பசியினாலும் கஷ்டப்படுகின்ற ஒவ்வொரு மனிதருக்கும் நாங்கள் ஒவ்வொருவரும் எங்களால் முடிந்த உதவிகளை அவர்களுக்கு செய்து அவர்களுக்கு நம்பிக்கை தருகின்ற மக்களாக வாழ உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5.அன்பின் இறைவா, உடல் உள்ள நோய்களால் பாதிக்கப்பட்டு மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கை இழந்து வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் உமது திருவுடல் சுகமும் அருளும் தருகின்ற அருட்சாதனமாக மாற உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 20-ம் ஞாயிறு(18.08.2024)**

**நீ மொ 9:1-6 எபே 6:15-20 யோவா 6: 51-58**

**முன்னுரை**

புனித அகுஸ்தினார் நற்கருணையின் பெருமையை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். கடவுள் நிறைவான ஞானம் உடையவராக இருந்தும் தன்னுடைய அன்பை வெளிப்படுத்த நற்கருணையை ஏற்படுத்துவதை தவிர வேறு மேலான வழியை தன்னுடைய ஞானத்தால் கண்டறிய இயலவில்லை. கடவுள் எல்லாக்





கொடைகளின் ஊற்றாக இருந்தும், நற்கருணையை விட மேலான விலைமதிப்புடைய கொடையை அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை. கடவுள் எல்லாம் வல்லவராக இருந்தும் மனிதனுக்கு கொடுப்பதற்கு நற்கருணையை விட வேறு மேலான ஒன்றை தன்னுடைய வல்லமையைப் பயன்படுத்தி அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை.

நற்கருணையைத் தவிர மேலான செல்வத்தை கடவுள் இந்த உலகத்திற்குத் தரவில்லை என்ற கருத்தைத்தான் இன்றைய நற்செய்தி வாசகம் சுட்டிக் காட்டுகிறது. இப்படிப்பட்ட மேலான நற்கருணை விருந்தில் நாமும் பங்கு பெற்று இறை அன்பையும் அவரது அருளையும் முழுமையாக பெற்று கிறிஸ்துவின் அன்புக் கட்டளையை வாழ்வாக்கி கிறிஸ்துவுக்கும் அவரது நற்செய்திக்கும் சாட்சிகளாக வாழ அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் ஞானம் ஒரு விருந்தை ஏற்படுத்தி இவ்விருந்தில் பங்கெடுக்க அழைப்பு விடுக்கின்றது. உண்மையான ஞானம் கடவுளைத் தேடுகிறது. போலி வாழ்வு உலகப் பற்றைத் தேடுகிறது. இருப்பதை மறந்து இல்லாததைத் தேடும் அறிவிலிகளாக இல்லாமல், ஞானமுள்ளவர்களாக வாழ இவ்வாசகம் அழைப்பு விடுக்கின்றது ஞானமாகிய இறைவன் வழங்குகின்ற அந்த விருந்தில் பங்கெடுத்து உயிரோட்டமுள்ள கிறிஸ்தவ விசுவாசிகளாக வாழ வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

வாழ்வு தரும் உணவு நானே இந்த உணவை உண்கிறவர்கள் என்றுமே வாழ்வார்கள் என்றார் இயேசு. அவரின் உடலை உட்கொண்ட சீடர்கள் அவரின் உணர்வுகளை தமதாக்கிக் கொண்டார்கள். அப்படிப்பட்ட உணர்வோடு நாமும் நலமுடன் வாழ்ந்து அவரை என்றும் வாழ்த்திப் போற்றி அவருக்கு நன்றியுடன் வாழ வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். இயேசுவின் திருவுடலை உட்கொள்ளும் ஒவ்வொருவரும் அவரில் உயிர் வாழ்கிறோம். அவர் நம்மில் உயிர் வாழ்கிறார் என்பதை உணர்ந்து இயேசுவின் இதய உறவில் இணைந்து செயல்பட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1.அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியானவரின் கொடைகளில் ஒன்றாகிய இறை ஞானத்தைப் பெற்று இறைவனது விருப்பத்தை செயல்படுத்த தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2.அன்பின் இறைவா, உமது திருவிருந்தில் பங்கு பெறுகின்ற நாங்கள் ஒவ்வொருவரும் இறை உறவிலும், மனித உறவிலும் நாளுக்கு நாள் வளர்ந்து உமக்கும் எங்கள் அயலாருக்கும் பணி செய்து வாழ